**<u>O .S. 60/2017 ,      08.02.2021,                01.00 pm - 01.20 pm</u>**

**வா.சா.1, ஜெயபால், த/பெ.பெருமாள்**

<u>முதல் விசாரணை:-</u>

வேலூர் மாவட்டம், நாட்டறம்பள்ளி வட்டம், தெக்குப்பட்டு கிராமம், கே.கே.நகர் பகுதியில் வசிக்கும் இந்து மதத்தை சார்ந்த சுமார் 65 வயதுடைய பெருமாள் மகன் ஜெயபால் ஆகிய நான் சத்தியபிரமாணம் செய்து கூறுவது என்னவென்றால்:

சத்தியமாக சொல்கிறேன். என்னுடைய பிரமாண பத்திரிக்கையில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். திருப்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதமன்றத்தின் அசல் வழக்கு எண்.797/1990-ன் வழக்குரையின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆகும் (அந்த ஆவணமானது வாணியம்பாடி உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.311/1995 ஆக உள்ளது என்றும், அந்த வழக்கின் வழக்குரை தான் வா.சா.ஆ.1 என்று வாதி தரப்பு வழக்கறிஞர் கூறுகிறார்). அசல் வழக்கு எண்.797/1990-ன் எதிர் வழக்குரையின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2 ஆகும். (அந்த ஆவணமானது வாணியம்பாடி உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.311/1995 ஆக உள்ளது என்றும், அந்த வழக்கின் வழக்குரை தான் வா.சா.ஆ.2 என்று வாதி தரப்பு வழக்கறிஞர் கூறுகிறார்). அசல் வழக்கு எண்.311/1995-ற்கான தீர்ப்பின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3 ஆகும். அசல் வழக்கு எண்.311/1995-ற்கான தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4 ஆகும். அசல் வழக்கு எண்.609/1972 வழக்கின் வழக்குரையின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5 ஆகும். அசல் வழக்கு எண்.609/1972-ன் எதிர் வழக்குரையின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.6 ஆகும். அசல் வழக்கு எண்.609/1972-ன் தீர்ப்பின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.7 ஆகும். அசல் வழக்கு எண்.609/1972-ன் தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.8 ஆகும். தெக்குபட்டு கிராமத்தின் செட்டில்மெண்ட் பதிவேட்டின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.9 ஆகும். மேல்முறையீட்டு எண்.15/1974-ன் தீர்ப்பின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.10 ஆகும். மேல்முறையீட்டு எண்.15/1974-ன் தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.11 ஆகும். 2210/1997 சென்னை உயர்நீதிமன்ற வழக்கின் இரண்டாம் மேல்முறையீட்டின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.12 ஆகும். முதல் பிரதிவாதியின் தந்தை வருவாய்துறையினருக்கு வழங்கிய மனுவின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.13 ஆகும். அசல் வழக்கு எண்.108/2013-ன் தீர்ப்பின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.14 ஆகும். அசல் வழக்கு எண்.108/2013-ன் தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.15 ஆகும். 10.04.1907 கலவெட்டி பெரியண்ணன் பெயரிலுள்ள கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.16 ஆகும். 19.03.1952 தேதியிட்ட முதல் பிரதிவாதியின் தந்தை பெயரிலுள்ள கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.17 ஆகும். 10.01.1983 ஆம் ஆண்டு முதல் பிரதிவாதி பெயரில் அவரது தந்தை ஏற்படுத்திய தானப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.18 ஆகும். 25.12.1985 தேதியிட்ட கலவெட்டி பெரியண்ணன் பிள்ளைகள் முதல் பிரதிவாதி பெயரில் ஏற்படுத்திய கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.19 ஆகும். 10082/1989 நீதிபேராணையின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.20 ஆகும். (மேற்படி ஆவணங்களான 1 முதல் 13 வரை மற்றும் 16லிருந்து 20 வரை உள்ள ஆவணங்கள் வேறொரு வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட குறியீடு செய்யப்படாத ஆவணத்தை சார்பு நீதிமன்றத்திலிருந்து சான்றிட்ட நகலாக பெற்று இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டதாக 1ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் குறியீடு செய்யக்கூடாது என்று ஆட்சேபனை தெரிவித்தார். அந்த

ஆட்சேபனை மற்றும் ஆவணங்களின் ஏற்பு தன்மையை பற்றி தீர்ப்பின்பொழுது தீர்மானிக்கப்படும் என்று முடிவு செய்கிறது. ஆட்சேபனையின்பேரில் ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகின்றன).

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.